**சுற்றறிக்கை இலக்கம் : 07/2005**

2005.06.22

அனைத்து பிரதேச செயலாளர்கள் / மாவட்டப் பதிவாளர்கள்,

அனைத்து காணிப் பதிவாளர்கள் மற்றும் மேலதிக மாவட்டப் பதிவாளர்கள்,

**பிறப்பு, இறப்பு மற்றும் விவாக சான்றிதழ் பிரதிகள் விநியோகிப்பதற்கான கட்டணங்கள், கண்டிய சட்ட விவாக மற்றும் விவாகரத்துச் சட்டம் மற்றும் முஸ்லிம் விவாக மற்றும் விவாகரத்துச் சட்டத்தின் கீழ் அறவிடப்படும் கட்டணங்களைத் திருத்தம் செய்தல்.**

---

மேற்குறிப்பிட்ட கட்டணத் திருத்தங்கள் தொடர்பாக கௌரவ அரச நிர்வாக மற்றும் உள்நாட்டலுவல்கள் அமைச்சரினால் விதிக்கப்பட்ட பின்வரும் விதிகள் மற்றும் ஒழுங்குவிதிகள் 2005.06.08 அன்று பாராளுமன்றத்தினால் அங்கீகரிக்கப்பட்டுள்ளன:

1. பிறப்பு மற்றும் இறப்புப் பதிவுச் சட்டத்தின் 69 ஆம் பிரிவின் கீழ் விதிக்கப்பட்ட விதிகள்.
2. விவாக (பொது) பதிவுச் சட்டத்தின் 7 மற்றும் 51 ஆம் பிரிவுகளின் கீழ் விதிக்கப்பட்ட விதிகள்.
3. கண்டிய விவாக மற்றும் விவாகரத்துச் சட்டத்தின் 47 ஆம் பிரிவின் கீழ் விதிக்கப்பட்ட விதிகள்.
4. முஸ்லிம் விவாக மற்றும் விவாகரத்துச் சட்டத்தின் 94 ஆம் பிரிவின் கீழ் விதிக்கப்பட்ட ஒழுங்குவிதிகள்.

02. இத்திருத்தங்கள் தொடர்பான 2004.12.16 ஆம் திகதிய 1371/25 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலின் பிரதியொன்றை இத்துடன் இணைத்து அனுப்புகின்றேன். இத்திருத்தங்களுக்கு அமைய, பிறப்பு, இறப்பு மற்றும் விவாக சான்றிதழ் பிரதிகளை விநியோகிக்கும் போது அறவிடப்படும் கட்டணங்கள் பின்வருமாறு திருத்தப்பட்டுள்ளன:

| விடயம் | திருத்தப்பட்ட கட்டணம் (ரூபா.) |
|---|---|
| 1. சான்றளிக்கப்பட்ட பிரதியொன்றுக்காக விண்ணப்பிக்கும் போது ஆவணத் தேடுதல் அவசியமற்ற சந்தர்ப்பங்களில், சான்றளிக்கப்பட்ட பிரதி அல்லது சுருக்கம் அல்லது பதிவு செய்யப்படாமைக்கான சான்றிதழ் விநியோகிப்பதற்காக | 25.00 |
| 2. சான்றளிக்கப்பட்ட பிரதியொன்றுக்காக விண்ணப்பிக்கும் போது 03 மாதங்களுக்கு மிகாத காலப்பகுதிக்கான ஆவணத் தேடுதல் அவசியமாகின்ற சான்றளிக்கப்பட்ட பிரதி அல்லது சுருக்கம் அல்லது பதிவு செய்யப்படாமைக்கான சான்றிதழ் விநியோகிப்பதற்காக. | 50.00 |
| 3. சான்றளிக்கப்பட்ட பிரதியொன்றுக்காக விண்ணப்பிக்கும் போது 02 ஆண்டுகளுக்கு மிகாத காலப்பகுதிக்கான ஆவணத் தேடுதல் அவசியமாகின்ற சான்றளிக்கப்பட்ட பிரதி அல்லது சுருக்கம் அல்லது பதிவு செய்யப்படாமைக்கான சான்றிதழ் விநியோகிப்பதற்காக. | 100.00 |

**03.** இந்த திருத்தப்பட்ட கட்டணங்கள் **உடனடியாக நடைமுறைக்கு வரும் என்பதைத் தயவுடன் அறியத்தருகின்றேன்.** எனவே, இந்த திருத்தப்பட்ட கட்டணங்கள் குறித்து உங்கள் அலுவலக ஊழியர்களுக்குத் தெளிவுபடுத்தி, சான்றிதழ் பிரதிகளை வழங்கும் போது அக் கட்டணங்களை அறவிடுமாறு அறிவுறுத்தல் வழங்கவும். பொதுமக்களின் அறிவிற்காக அலுவலகத்தில் இந்த திருத்தப்பட்ட கட்டணங்கள் குறித்த அறிவித்தல் ஒன்றையும் தயவுசெய்து காட்சிப்படுத்தவும்.

**04.** இதற்கு மேலதிகமாக, கண்டிய விவாக மற்றும் விவாகரத்து மற்றும் முஸ்லிம் விவாக மற்றும் விவாகரத்துச் சட்டத்தின் கீழ் அறவிடப்படும் முத்திரை வரி மற்றும் ஏனைய கட்டணங்களும் திருத்தப்பட்டுள்ளதால், இது குறித்து உங்கள் அதிகாரப் பிரதேசத்திலுள்ள விவாக, பிறப்பு மற்றும் இறப்புப் பதிவாளர்களுக்கும் தயவுசெய்து உடனடியாக அறிவிக்கவும்.

**(ஒப்பம்)**

**எல். கே. ரத்னசிறி**

பதிவாளர் நாயகம்

**பிரதிகள்:**

1. செயலாளர் / அரச நிர்வாக மற்றும் உள்நாட்டலுவல்கள் அமைச்சு - தகவலுக்காக.
2. அனைத்து மாவட்டச் செயலாளர்கள் / மேலதிக பதிவாளர் நாயகங்கள் - தகவலுக்காக.
3. அரச நிதிப் பணிப்பாளர் நாயகம் - தகவலுக்காக.
4. வலய உதவிப் பதிவாளர் நாயகங்கள் - தகவலுக்காக.
5. கணக்காளர் - தகவல் மற்றும் அவசியமான நடவடிக்கைகளுக்காக.
6. கணக்காய்வாளர் நாயகம் - தகவலுக்காக.
7. உள்ளக கணக்காய்வுப் பிரிவு - தகவலுக்காக.
8. அனைத்து விவாக, பிறப்பு மற்றும் இறப்புப் பதிவாளர்கள் - தகவல் மற்றும் மேலதிக நடவடிக்கைகளுக்காக.